11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

விளம்பரம் VLAMBARAM™

☎ 416-282-8059

416-282-4978

நதி 11 AUGUST 01, 2001 பாலம் 15


- ❊ உன்னத உறவின் ஒரு பிரிவு.... (பக். 7)
- ❊ கோழிக்குஞ்சை டைனசோராக மாற்றும் விஞ்ஞானம் (பக். 2)
- ❊ வீட்டின் கீழ்ப்பகுதி வதிவிடமா? (பக். 17)
- ❊ உலக கின்னை கிரிக்கெட் போட்டியில் பங்கெடுக்கும் தமிழன் (பக்.6)
- ❊ இராசிகள் உடலின் சமநிலையைப் பாதிக்குமா (பக். 5)
- ❊ அழிந்த இனத்திலிருந்து புதிய இனம் தோன்றியிருக்குமா? (பக். 9)
- ❊ மூச்சுத் திணறல் நீங்க....( பக். 13)
- ❊ பராசக்தியிலிருந்து படையப்பாவரை (பக். 4)
- ❊ முதியவர்களும் வாகனசாரதிப் பத்திரமும் (பக். 4)




RE/MAX Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002
Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB

## அருள் விருந்து

*-செ. சிவசுப்பிரமணியம்*

☞ பொறாமைப்படுவனுடைய வாழ்வு சிதறடைகின்றது. தன் இலட்சியத்தினின்று பிறழாதிப்பதற்கிடையில் பிறரைத் தழுவி நடப்பவன் வெற்றியடைகிறான்.

☞ இளமையில் ஒழுங்குப் பாடான வாழ்க்கை வாழாதவர்களும் இளமையில் செல்வத்தைச் சேகரித்து வைக்காதவர்களும் கடந்து போன காலத்தைக் குறித்து முதுமையில் மிக வருந்துதவார்கள்.

☞ தீமையின் துணையால் தீமையைப் போக்க முடியாது. நன்மையின் துணைகொண்டு தீமையை அகற்றலாம்.

## உன்னை அறிந்தால்

6 பில்லியன் மக்களிற்கு மேல் வசிக்கும் இப்பூலகில் எவ்வளவு மக்களை எல்லோரும் தெரிந்திருப்பார்கள். ஒருவருமே கிடையாது. இந்த உலகிற்கு அனுப்பப்படும் உயிரினங்களிற்கு ஏதோ தேவை இருக்க வேண்டும் போலத்தான் எண்ணத்தோன்றுகின்றது. இதன் அடுத்த கட்டமாக உருவாக்கப்படும் மனித உடல்களிற்கும் ஏதோ காரண, காரியம் இருந்தே தீர வேண்டும். வேறு உயிரினத்திற்கு இந்த உடம்பால் சிறுஉதவிகூட செய்ய முடியாவிட்டால் இந்த உடம்பு தேவையா? உலகில் பிறப்பவர்கள் யாவரும் வளர்ந்து, திருமணம் செய்து, சந்ததியை வளர்ப்பதுதான் வாழ்வின் அர்த்தமா? குடும்பம் என்ற பந்தத் தொடர்ச்சி தேவைதானா? பெயர்சொல்ல ஒரு பிள்ளையை உருவாக்கும் மனிதன் என்ற உபகரணம் தேவையா? இதுதான இலகுவாக எல்லோராலும் செய்யக்கூடியது. இதனை நியாயப்படுத்துபவர்களிற்கு பல சங்கடங்கள், சிக்கல்கள். வித்தியாசமாக சிந்திப்பவர்கள் ஊக்கிவிக்க வேண்டும். புதிய சிந்தனைகள், ஆக்கங்கள் வெளிப்பட வேண்டும். புதிய விடயங்கள் தோன்ற வேண்டும். பழைய மூடநம்பிக்கைகள் மறைய வேண்டும்.

மாற்றங்கள் தேவை. உலகில் பலகோடி மக்கள் வாழ்ந்து கொண்டே இருக்கிறார்கள். ஒருவரைப் பற்றி எல்லோராலும் அறியப்படுவது சிரமான விடயம். ஆகக்குறைந்தது அந்த சமுதாயத்திலாவது தெரிந்திருப்பது ஒரு சாதனை இல்லையா? பிறந்ததில் ஒரு நோக்கமாவது, நிறைவேறியது என்று கூறலாம். இந்த வகையில் தமிழர் சமுதாயத்தில் பலர் உருவாக வேண்டும் சமுதாயம் வளரவேண்டும். உலகம் சிறக்க வேண்டும். தமிழன் தனக்கென தனியிடம் பெறவேண்டும்.

*நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

*-நெற்றிக்கண்ணன்*

இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont.,M1K 2R9

☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona

*ஆன்மா கடவுளுக்குச் சொந்தம்;*
*தேகம் மண்ணுக்குச் சொந்தம்;*
*சொத்து யாருக்குச் சொந்தம்.* — இத்தாலியப் பழமொழி

Singapore Communication

FREE PAGER

-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

$35.00

100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525



சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



London Life

LIBERTY MUTUAL

☞ Auto
☞ Home
☞ R.R.S.P
☞ Life
☞ Disability
☞ Mutual Fund
☞ Group Insurance
☞ Child Education
☞ Travel ☞ Business

Ⓒ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH

VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (85)

-விஜே குலத்துங்கம்

வாழைப்பழம் உலகின் முக்கிய உணவுப் பொருட்களில் ஒன்றாகும். வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நான்காவது முக்கிய உணவுப் பொருளாக உள்ளது. ஆபிரிக்க நாடுகளில் மக்கள் உட்கொள்ளும் மொத்த கலோரிகளில் நான்கில் ஒரு பங்கு வாழைப்பழத்தில் இருந்துதான் வருகின்றது. வாழைப்பழம் என்று சொல்லும் போது இது வாழைப்பழமாகவும் மரக்கறியாகவும் மற்றும் வேறு சில உணவுப் பொருட்களுக்காக பாவிக்கப்படும். பச்சை வாழைக்காய்களும் இதில் அடங்கும். 120 நாடுகளைச் சேர்ந்த விவசாயிகள் வருடம் ஒன்றிற்கு 95 மில்லியன் தொன்கள் நிறையுள்ள வாழைப்பழங்களை உற்பத்தி செய்கின்றார்கள். இவற்றுள் 85 வீதம் உள்நாட்டிலேயே பாவனைக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றது. எம்மவர்களின் வீடுகளில் வாழைப்பழம் சாப்பிடாத வீடு ஒன்று கூட இல்லையென்று கூறலாம். மற்றைய இனத்தவர்களில் கூட சாப்பிடாதவர்கள் இல்லை எனக் கூறலாம்.



வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் வாழை மரங்களை Black Sigatoka என்ற பங்கசு தாக்குகின்றது. இந்தப் பங்கசு வாழைஇலைகளைத் தாக்கி 50 வீதமான விளைச்சலைக் குறைக்கின்றது. இதைக் கட்டுப்படுத்த இரசாயன மருந்துகளை உபயோகிப்பது மிகவும் செலவு கூடிய விடயமாகும். கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் பொதுவாக மக்கள் உபயோகிக்கும் வாழைப்பழ இனம் Cavendish Dessert Banana எனப்படும். இந்த இனத்தை வளர்க்கும் போதும் நோய்களைக் கட்டுப்படுத்த இரசாயனப் பொருட்களுக்காக அதிக பணம் செலவிடப்படுகின்றது. மற்றைய பயிர்களில் நெடுங்காலமாக விஞ்ஞான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கலப்பினப் பிறப்பு மூலம் புதிய நல்ல இனங்கள் உருவாக்கப்பட்டன. ஆனால் வாழைப் பயிர்கள் ஆரம்ப காலத்தில் இருந்தே விதைகள் இல்லாத இனங்களாகவே தெரிவு செய்யப்பட்டு வந்தன. பொதுவாக இலிங்க முறையில் இனப் பெருக்கம் செய்யும் இனங்களில் வெவ்வேறு இனங்கள் கலக்கப்பட்டு புதிய நல்ல குணாதியங்களை உடைய இனங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனால் வாழை இனங்களில் பதிய முறையிலேயே புதிய பயிர்கள் உருவாக்கப்படுகின்றன. தாய்த்தாவரத்தின் அடியில் தோன்றும் குட்டிகள் மூலம் தான் புதிய பயிர்கள் உருவாகின்றன. வெகு நீண்ட காலமாக எந்தவித மாற்றமும் இல்லாத அதே இனங்கள் தான் தொடர்ந்தும் பாவனையில் உள்ளது. எனவே பல்லாயிர வருடங்களுக்கான கூர்ப்பு விருத்திகள் ஏற்படவில்லை.

எனவே வாழைமரங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து 11 நாடுகளைச் சேர்ந்த தாவரவியல் ஆராய்ச்சியாளர்கள் Global Musa Genomics Consortium என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள். இதில் MUSA என்பது வாழைமரத்தின் தாவரவியல் பெயரைக் குறிக்கும். இந்த அமைப்பு வாழைமரத்தின் Gene கட்டமைப்பைக் கண்டறிவதற்காக உருவாக்கப்பட்ட ஒரு சர்வதேச இணையமாகும். இது வரையில் gene கட்டமைப்பைப் பற்றி அறிய முற்படும் மூன்றாவது பயிர் வாழைமரமாகும். நெற்பயிரில் முதலாவதாகவும், பின்னர் Arabidopsis thaliana என்னும் புல் இனத்தில் இரண்டாவதாகவும், இப்போது வாழைமரத்தில் மூன்றாவதாகவும் gene களின் கட்டமைப்பை கண்டறியும் முயற்சி நடைபெறுகின்றது. வாழைப்பயிரில் 11 சோடி நிற மூர்த்தங்கள் உள்ளன. இதில் 500 தொடக்கம் 600 மில்லியன் அடிப்படை gene கட்டமைப்புகள் உள்ளன என்றும் கருதப்படுகின்றது. Gene கட்டமைப்பு அறியப்பட்டதும் பல புதிய இனங்கள் உருவாக்கப்படலாம். இவை நோய்களுக்கு எதிர்ப்பு உள்ளவையாகவும் பல ஊட்டச் சத்துகள் நிறைந்தவையாகவும் உருவாக்கப்படலாம். மேலும் மூன்றாம் உலக நாடுகளில் உள்ள மக்களை சென்றடைவதற்காக நோய்த் தடுப்பு மருந்துகளையும் வாழைப்பழங்களில் புகுத்திவிடலாம். எனவே கூடிய சீக்கிரத்தில் புதிய சுவைகளையுடைய வாழைப்பழங்களை நாங்கள் ருசி பார்க்க முடியும்.

சில வருடங்களுக்கு முன்னர் "ஜூராசிக் பார்க்" என்ற படம் வெளிவந்தது. பல மில்லியன் வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த டைனசோர் அல்லது இடியேற்றுப்பல்லி என்ற விலங்குகளை அழியாமல் பாதுகாப்பாக இருந்த சில பகுதிகளில் இருந்த DNA க்களை எடுத்து அதன் மூலம் நிஜ வடிவமான டைனசோர்களை உருவாக்குவதே இந்தப் படத்தில் வரும் கதையாகும். இந்தப் படத்தின் இரண்டாம் பாகமாக 'Lost World" என்ற படமும் பின்னர் வெளிவந்து இப்போது மூன்றாம் பாகமும் வெளிவந்தது. இந்தப் படங்களிலும் சேகரிக்கப்பட்ட DNA க்களை வைத்து முழு உருவமான Dinasour கள் உருவாக்கப்பட்டவது தான் கதையாக இருந்தது. அனால் இவை வெறும் கற்பனைக் கதைதான். தனியே DNA க்களை வைத்துக் கொண்டு, ஒரு முழு உருவத்தை உருவாக்குவது சாத்தியமில்லை. ஆனால் அமெரிக்க விஞ்ஞானிகளின் கருத்துப்படி இந்த நூற்றாண்டின் இறுதிக்கு முன்பாக இது ஒரு வேறு வழியில் சாத்தியமாகும் எனக் கூறுகின்றார்கள். கோழிக் குஞ்சுகளின் உள்ளே DNA ஐ செலுத்தி, அதை டைனசோர்களாக உருமாற்றம் செய்வதாகும்.

இப்போதுள்ள விலங்குகளின் gene கட்டமைப்பை பார்க்கும் போது, அதிகமான gene கள் பல்வேறு விலங்கினங்களுக்கிடையே பொதுவாக உள்ளன. இதனால்தான் ஒரு இனத்திலிருந்து வேறு இனத்திற்கு gene மாற்றீடு செய்யக் கூடியதாகவுள்ளது. ஒரு விலங்கிலிருந்து கூட gene ஐ எடுத்து தாவரமொன்றினுள்ளே செலுத்தக் கூடியதாகவுள்ளது. முதலில் இந்த gene கள் எப்படி வெவ்வேறு உருவமுள்ள விலங்குகளை உருவாக்குகின்றன என்பதைக் கண்டறிய வேண்டும். உதாரணமாக ஒரு கோழியின் gene களையும், ஒரு ஓணானின் gene களையும் ஒப்பிட்டு அவை எவ்வாறு ஓணாணின் உருவத்தையும் கோழியின் உருவத்தையும் தோற்றுவிக்கின்றது என்பதைக் கண்டறிய வேண்டும். உதாரணமாக எந்த gene ஒரு எலும்பை நீண்டதாகவோ குறுகியதாகவோ தோற்றுவிக்கின்றது என்பதை கண்டறிய வேண்டும்.

Phillop Cohen என்ற விஞ்ஞானி New Scientist என்ற சஞ்சிகையில் எழுதிய கட்டுரை ஒன்றில் இந்த அடிப்படையில் சில ஆரம்ப முயற்சிகள் வெற்றியளித்துள்ளதாக கூறியுள்ளார். கலிபோர்னியாவைச் சேர்ந்த சில விஞ்ஞானிகள் 60 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் இருந்த கோழிகளில் பல் அரும்புகளை (Tooth binds) கோழிக் குஞ்சினுள் பழைய புதைபொருள் அகழ்விலிருந்து எடுக்கப்பட்ட ஒரு gene ஐ புகுத்தி, மீண்டும் தோற்றுவித்துள்ளார்கள். இப்படியாக ஏற்கனவே உள்ள ஒரு விலங்கினத்தில் டைனசோரின் gene களை புகுத்தி டைனசோரை ஒத்த விலங்குகளை இன்னும் 50 - 100 வருடங்களில் உருவாக்கலாம் எனக் கூறுகின்றார்கள்.

"ஆறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான வீடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை வீஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.



13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

புதிய இடத்தில்

☎: (416) 267-0408

**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 121**



**இடமிருந்து - வலம்**

1. புலிகளால் அண்மையில் தாக்கப்பட்ட விமானப் படைத்தளம் உள்ள இடம்
3. தாய் 5. உண்மை (வல - இட)
6. மசூதி 10. குரங்கு 12. செல்வம்
13. இந்தியாவில் படிப்பறிவு இல்லாத கொள்ளைக்காரரும் பாராளுமன்ற உறுப்பினராகலாம் என நிரூபித்த பெண்
14. மது

**மேலிருந்து - கீழ்**

1. மூங்கில்
2. தமிழ் திரையுலகில் சரித்திரம் படைத்து அண்மையில் மறைந்த மாமேதை
4. பித்து 7. நல்ல மணம் (கீழ் - மேல்)
8. இறந்தவரை உயிர்ப்பிக்க அனுமான் தூக்கிய மலை
9. காற்று (கீழ் - மேல்)
11. மனித உறுப்பு ஒன்று
13. நில நடுக்கம் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் AUGUST 28, 2001க்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.






**120இல் வெற்றி பெற்றோர்**

1) Rajaratnam E., Scarborough. Ont.
2) Mrs. Sivagnaratnam S. Scarbo.. Ont.

*ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்


*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

**ரவி நடராஜா**

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள



**Accident & Traffic Ticket**
**(13 Years Insurance Claims Experience)**

**Tel: (416) 245-6555**
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

**Tel: (416) 755-2801**
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

## துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு


மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு

அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing >Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

தமிழர் நிர்வாகத்தில்



ஒரு


# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)

5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-332-8451

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(56)

ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்த விரும்புவர்கள், ஆரம்பத்தில் மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள், வீதிப் பரீட்சைகளுக்கு தோற்றுதல், வீதி ஒழுங்குச் சட்ட விதிகள், இவ் வீதி ஒழுங்குச் சட்ட விதிகளை மீறும் போது எதிர் கொள்ளும் நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் உட்பட பல விடயங்களை இத் தொடர் கட்டுரையில் முன்னர் ஆய்வு செய்தோம்.

இம்முறை கடந்த ஏப்பிரல் 4ஆம் திகதி, 2000 ஆம் ஆண்டு, எற்ரோபிக்கோ நகரில் ஒரு வயோதிப மூதாட்டியின் சித்த சுவாதீனமான நிலையில் வாகனம் ஓட்டி ஏற்படுத்திய கொடிய விபத்தினை அடிப்படையாக வைத்து நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அது தொடர்பான தகவல்களை அடிப்படையாக வைத்து இவ் அத்தியாயத்தினைப் பார்ப்போம்.

கடந்த நாற்பது வருடங்களாக வாகனம் செலத்தி வரும் திருமதி. பில்லர் கிக்ஸ் என்னும் 85 வயது மூதாட்டி வாகனத்தினை அந்த இரவு நேரம் எற்ரோபிக்கோ நகரில் செலுத்தி வந்தார். வரும் போது வீதியில் நடந்து சென்ற கம்பனி ஒன்றின் நிர்வாகத் துறையில் உயர் அதிகாரியாக பணி புரியும் 42 வயது பெண் மணி ஒருத்தியினை மோதிவிட்டார். அப் பெண்ணின் குற்றுயிர் உடல் இம் மூதாட்டியின் காரின் கீழ் சிக்குப் பட்டு இழுத்து செல்லப்பட்டது. இம் மூதாட்டியின் வீட்டுக்கு அருகே காரில் சிக்கியிருந்த நிலைமையில் அக் குற்றுயிர் உடல் கழன்று போக, மூதாட்டி ஒன்றும் அறியாத நிலைமையில் சர்வசாதாரணமாக வாகனத்தினை வீட்டு கராஜினுள் நிறுத்திவிட்டார். பின்பு வீட்டினுள் சென்று சர்வசாதாரணமாக ஒன்றும் தெரியாது நின்ற போது, பொலிஸார் கதவினை தட்டி விடயத்தினை தெரிவித்த போதே இப்படி ஒரு விபத்து நடந்ததா? என திகில் கொண்டிருந்தார்.

இவ் வழக்கில் குற்றவாளியாக தீர்ப்பு வழங்கப்பட்ட மூதாட்டியை நீதிபதி திரு. ஜெரால்ட் லாப்கின் அவர்கள் கடந்த யூலை 23ஆம் திகதி, தீர்ப்பு வழங்கும் போது இத்தகைய வயது முதிர்ந்தவர்கள் வாகனம் செலுத்தும் போது அவர்களின் வாகனம் ஓட்டும் சகல திறமைகள் உட்பட மருத்துவ பரிசோதனைகள் யாவற்றிலும் போக்குவரத்து அமைச்சு மேலும் மேலும் மிகுந்த கண்டிப்பாக இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொதுவாக ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்தும் சாரதிகள் எழுபது வயதுக்கு மேற்பட்டவராக இருக்கும் நிலையில் ஏதாவது ஒரு சிறு விபத்தினை எதிர்கொண்டாலும், அவர்களின் சாரதிப் பத்திரம் இரத்து செய்யப்பட்டு வீதிப் பரீட்சைக்கு மீண்டும் ஒரு முறை அனுப்பப்படுவது வழமையாகும். இது தவிர எண்பது வயதுக்கு மேற்பட்ட சாரதிகள் அடிக்கடி போக்குவரத்து அமைச்சின் சட்ட திட்டங்களுக்கு உட்பட்ட கண்பார்வை பரிசோதனை, மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்பட்டேயாக வேண்டும் என்பதும் நிபந்தனையாகும்.

ஆனால் நீதிபதி திரு. ஜெரால்ட் லாப்கின் அவர்களின் தீர்ப்பின் பிரகாரம் வயது போகப் போக அவர்களின் உடல் நிலையில் ஏற்படும் சித்த சுவாதீனமான நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களினால் வாகனம் செலுத்தும் அனுமதி வழங்கும் பரிசீலினை என்பது மிகவும் கடுமையாக இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கையினை போக்குவரத்து அமைச்சு ஆழமாக ஆய்வு செய்ய தொடங்கியுள்ளது.

(இதே போல சில வருடங்களின் முன்பு நோர்த்யோர்க் நகரில் ஒரு கனடிய முதியவர் ஒருவர் திடீரென பிரேக் என நினைத்து அச்சிலேற்றரினை மிதித்து கார் பாய்ந்து முன்னே நின்ற ஒரு ஈழத்தமிழரின் சிறு பாலகன் ஒருவனை பலி கொண்டது என்பதும் இன்னொரு செய்தியாகும்.)

கீயூபா நாட்டில் இருந்து 1948 ஆம் ஆண்டு கனடாவில் குடியேறிய இரு பிள்ளைகளின் தாயாரன இம் மூதாட்டி உடல், உள்ளம் யாவும் பதறிய நிலைமையில் ஒன்றுமே அறியாத நிலைமையில் நீதிமன்றத்தில் தோற்றிய போது சகலருக்கும் ஒரு அனுதாப உணர்வு ஏற்பட்ட போதும் சட்டம் இவரை குற்றவாளியாக தீர்ப்பு வழங்கி தமது கடமைகளை சற்று கருணை காட்டி குறைந்த நிலைமையில் இருந்து செயல்பட்டது.

நிரந்தரமாக சாரதி அனுமதிப் பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டதுடன், பதினைந்து (15) மாதங்களுக்கு வீட்டுக் காவல் சிறைத்தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தில் தமது கருத்தினையே குறிப்பிட முடியாத அளவுக்கு இச் சம்பவத்தினாலும், வயது முதிர்ந்த நிலைமையிலும் தள்ளப்பட்டிருந்தார்.

ஆனால் இவ் வயது முதிர்ந்த மூதாட்டியின் வழக்கில் நீதிமன்றம் வழங்கிய கடுமையான எச்சரிக்கைக்கு வயது முதிர்ந்தவர்களின் நிறுவனம் ஏராளமான உதாரணங்களை எடுத்துக் காட்டி தங்கள் ஆட்சேபனையினை தெரிவித்திருந்தது என்பது இன்னோர் செய்தியாகும்.

இம் மூதாட்டி வயது முதிர்ந்தவர் என்றபடியாலும், எதுவித மதுபானமோ அல்லது போதை வஸ்துக்களோ அந்நேரம் உட்கொள்ளவில்லை என்ற நிலைப்பாட்டில் எதுவித திகில் சட்டமும் அற்ற நிலையில் ஒரு வகையான வயதான நிலைமைக்குரிய சித்த சுவாதீனம் என்ற படியால் மிகப் பெரிய தண்டனையில் இருந்து தப்த்துக் கொண்டார் என நீதிமன்ற தீர்ப்பு அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு ஒன்ராரியோ மாகாணத்தில் பெறப்பட்ட புள்ளிவிபரப்படி பின்வரும் தகவல் வீதி விபத்துகளும், விபத்துக்கு உட்பட்டோரின் வயது எல்லை, விகிதாசாரங்களை புலப்படுத்துகின்றன.






ஒன்ராரியோ மாகாணத்தின் 1999ஆம் ஆண்டு பெற்ற புள்ளி விபரப்படி

| வயது | லைசென்ஸ் வழங்கப்பட்ட மொத்த சாரதிகள் தொகை | வீதிவிபத்துக்களின் எண்ணிக்கை | இக் குறிப்பிட்டோரின் வீதிவிபத்துக்குட்பட்ட விகிதாசாரம் |
|---|---|---|---|
| 16 | 85 050 | 1 725 | 2.0% |
| 17 | 105 076 | 7 641 | 7.5% |
| 18 | 114 056 | 9 359 | 8.2% |
| 19 | 122 461 | 9 524 | 7.8% |
| 20 | 123 677 | 9 320 | 7.5% |
| 21 - 24 | 519 131 | 36 024 | 6.9% |
| 25 - 34 | 1576 673 | 90 101 | 5.7% |
| 35 - 44 | 1895 323 | 90 813 | 4.8% |
| 45 - 54 | 147 588 | 60 576 | 4.1% |
| 55 - 64 | 907 235 | 31 660 | 3.5% |
| 65 - 74 | 639 463 | 17 598 | 2.8% |
| 75 உம் அதற்கு மேலானா வயதானோர் | 354 581 | 9 732 | 2.7% |
| மொத்தம் லைசன்ஸ் சாரதிகள் | 7 918 314 | 3 74 073 | 5.1% |

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999

**(Professional Licensed Instructor In Car & Class Room)**

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 17

-*Dr. N. S. Moorthy Ph.D*

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

வான சாஸ்திரம் வானில் மின்னிக் கொண்டிருக்கும் எண்ணற்ற நட்சத்திரங்களைப் பற்றியும் அண்ட வெளியில் எண்ண முடியாத தூரத்தில் சஞ்சரித்துக் கொண்டிருக்கும் கோளங்களைப் பற்றியும் அவற்றுடன் தொடர்பான உலகின் உயிரினங்களின் செயல்பாடுகள் பற்றியும் கணக்கிட்டுக் கூறுவதாகும். இத்துறையில் நன்கு பாண்டித்தியம் பெற்றிருந்த பண்டைய தமிழர்கள் அதற்கும் ஒருபடி மேலே சென்று வானிலுள்ள கிரகங்களின் நிலை, அவை சார்ந்த இராசிகளின் நிலை ஆகியவை எவ்விதம் மனிதனது வாழ்க்கையிலும் உடல், உள நிலைகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வல்லன என்பன போன்ற விபரங்களை ஒரு கலையாகவே பாவித்துப் பயன்பெற்று வந்தார்கள்.

கு[illegible]தைகள் கருவில் உருவாகும் நேரத்தைக் கொண்டே அவற்றின் வாழ்க்கை முழுவதையும் கூறிவிடக்கூடிய அரிய கலை பழந்தமிழர் கலைகளுள் ஒன்றாகிய சோதிடக் கலையாகும். இதற்கும் மருத்துவத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பண்டைய மருத்துவர்கள் சோதிடத்தில் வல்லவர்களாகவும் காணப்பட்டார்கள். இதனால் வரும் நோயாளியில் ஏற்பட்டுள்ள உடல் உளக்காரணிகளுடன் அவற்றுக்கு மூலகாரணமான கால மாற்ற கோள்களின் நிலைகளையும் அவர்கள் நன்கு அறிந்து அவற்றிற்குரிய நிவர்த்திகளை முறையே செய்து நோயாளி பூரண சுகம் பெற வழி வகை செய்தார்கள். இப்போது பிரபல்யம் பெற்றுள்ள "காண்டம்" வாசித்தலையும் இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

இடைக்காலத்தில் பலவேறுபட்ட அரசியல் மாற்றங்களினாலும் அந்நிய ஆக்கிரமிப்புகளாலும் பெருமளவு அழிவுற்றுப் போன இக்கலை மிகச் சிறிய அளவில் இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. இவற்றை இப்போதைய மேலை நாட்டவர்கள் தமதாக்கும் முயற்சியில் முந்திக் கொண்டு வருவது வேதனைக் குரிய உண்மையாகும்.

சீன வைத்திய முறைப்படியும் ஆதியில் ஒரே சக்தியான மூல (Chi) பின் இரு பிரிவுகளாகி ஆண் பெண் (Yin - Yang) தன்மையைப் பிரதிபலிப்பனவாக மாறுகின்றன எனக் கூறப்படுகின்றது. இராசிகளைப் பொறுத்தவரையிலும் கூட முதல் ஆறு இராசிகளும் பஞ்ச பூதங்களில் நிலம், நீர் ஆகியவற்றின் சேர்க்கையைக் கொண்டவையாகவும் பெண் தன்மையுடன் இயற்கையில் தன்னடக்கமும் எதிர்க் குணம் கொண்டவையாகவும், பிந்திய ஆறு இராசிளும் பஞ்ச பூதங்களில் நெருப்பு, காற்று ஆகியவற்றின் சேர்க்கையைக் கொண்டவையாகவும் ஆண் தன்மையுடன் இயற்கையில் வெளிப்படையான குண நலத்துடன் நேர் (Positive) குணம் கொண்டவையாகவும் பிரதி பலிக்கின்றன. மேற் கூ[illegible] நேர் குணம் கொண்ட இராசிகளில் பிறந்தவர்கள் பெரும்பாலும் வெ[illegible]ப்படையான செயல்ப்பாடுகளில் ஈடுபடக் கூடியவர்களாகும்.

எதிர்க் குணம் கொண்ட இராசிகளில் பிறந்தவர்கள் உள்ளீடான செயல்பாடுகளைத் தம்மிடம் கொண்டவர்களாகவும் காணப்படுபவர்களெனத் தம்மிடம் கொண்டவர்களாகவும் காணப்படுவார்களென சாஸ்திரம் கூறுகிறது.

இராசிகளின் சக்கரத்தில் எதிரெதிராகக் காணப்படும் இராசிகள் எதிரெதிராகச் செயல்படுவதுடன் போட்டித் தன்மை கொண்டதாகவும் காணப்படும். இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கும் பிரபல வானியல் நிபுணர் Carl Jung ஒவ்வொருஇராசியும் அதற்கு எதிராமைந்துள்ள இராசியின் விதையைத் தன்னகத்தே கொண்டிருக்கும் எனக் கூறியுள்ளார்.

பன்னிரண்டு இராசிகளும் பொதுவாக இரண்டு பெரும் பிரிவுக்குள் அடங்கும்.
மேஷம் (Aries) முதல் கன்னி (Virgo) வரையிலான முதல் ஆறு இராசிகளும் தனிப்ட்ட குணநலன்களையும் வாழ்க்கைச் செயல்பாடுகளையும் பிரதிபலிக்கின்றன.

பிந்திவரும் துலாம் (Libra) முதல் மீனம் (Pisces) வரையிலான ஆறு இராசிகளும் சமூக நிலைகளையும் உலகத்துடனுள்ள தொடர்புகளையும் பிரதிபலிக்கின்றன.

எதிரெதிராக அமைந்துள்ள இராசிகள் பின்வருமாறு

| | |
|---|---|
| மேஷம் (Aries) | துலாம் (Libra) |
| ரி[illegible]ம் (Taurus) | விருச்சிகம் (Scorpio) |
| மி[illegible]னம் (Gemini) | தனுசு (Sagittarius) |
| கடகம் (Cancer) | மகரம் (Capricon) |
| சிம்மம் (Leo) | கும்பம் (Aquarius) |
| கன்னி (virgo) | மீனம் (Pisces) |




இவ்வெதிரெதிர் இராசிகளுக்கிடையிலின தொடர்புகள் உடல், உள சமநிலை நோய் நிலை போன்றவற்றை உள்ளடக்கிய வாழ்க்கை வட்டத்தை எவ்விதம் பாதிக்கின்றன என்பவற்றை இனிமேல் கவனிப்போம். இதற்கிடையில் பன்னிரண்டு என்ற எண் பழந் தமிழர்களுக்கு முக்கிய இலக்கமாகும். தமிழ்க் கடவுள் என வணங்கப்படும் முருகனது கரங்கள் பன்னிரண்டன்றோ. மாதங்களும் பன்னிரண்டு. இவற்றுடன் அக்குபங்சர் சக்தி பாயும் பாதைகளும் பன்னிரண்டுதான் என்பததை நான் இங்கு குறிப்பிடாமலிருக்க முடியாது.


**ACTION HONDA**

நேர்மையுடன் தமிழர் நலன் கொண்ட ஈழத்தமிழராகிய **சோதீஸ்** இன் விற்பனைக்கு பின்னருமான சேவையுடன் உங்கள் புதிய பழைய வாகனங்களை எங்கும் கிடைக்காத குறைந்த விலையில் பெற அழையுங்கள்.



**416-704-1179**




என் மூலம் **VOLVO** மற்றும் **CHRYSLER** வாகனங்களையும் மலிந்த விலையில் பெற்றுக்கொள்ளவாம்

**LIFE TIME OIL CHANGE, Bad Credit? I WILL HELP YOU**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்

Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm

4334 Kingston Rd, Scarborough




THE CHILDREN EDUCATION TRUST OF CANADA
( CET )
சீலன். A (சிவா)

TEL:(416) 451-0271 PAGER: (416) 980-9836
email: seelany2k@email.com

உங்கள் குழந்தையின் எதிர்கால கல்வியில் ஒரு சிறு தொகையை முதலிடுவதுடன் கனேடிய அரசின் கல்விக்கான மானியம் வருடத்திற்கு **$400 இலவசம்**



அரச அங்கிகாரம் பெற்ற புலமைப் பரிசில் சேமிப்பு திட்டம். (R.E.S.P)

THE ROYAL BANK
THE ROYAL TRUST
THE SCOTIA MCLEOD

**TWO YEARS DIPLOMA** ஐ வெற்றிகரமாக முடிப்பதன் மூலம் சகல புலமைப் பரிசில்களையும் பெற முடியும்.

இன்னும் பல சலுகைகள் உண்டு

உலகின் எந்தப் பாகத்திலும் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்வி பெறலாம்.

இலவச ஆலோசனைகள் பெற எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்

நாம் நமது குழந்தைகளை வளர்க்கத் தவறிவிட்டால் அதனால் பாதிக்கப்படுபவர்கள் நமது பேரக் குழந்தைகளே

# விளையாட்டுத் தகவல்கள் (81)

-எஸ். கணேஷ்



### தமிழ் வீரனால் கனடாவிற்கு பெருமை!

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்பது முதுமொழி! இருபத்து ஒரு வருடங்களுக்கு பின்பு வந்தோரை எல்லாம் வரவேற்கும்! வாழவைக்கும்! இக் கனேடிய தேசத்திற்கு கிரிகெட் World Cup இல் புகும் ஒரு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது! அதுவும் தமிழ் மகனால் இவ் வாய்ப்பு கிடைத்துள்ளது என்றால் மிகையாகாது! இது எமது தமிழ் சமூகத்திற்கும் பெருமை! கனேடிய தேசத்திற்கும் பெருமை.

2003 ஆம் ஆண்டு சவுத் ஆபிரிக்காவில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் World Cup போட்டிகளில் ஏற்கனவே சவுத் ஆபிரிக்கா, இந்தியா, ஸ்ரீலங்கா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து, சிம்பாவே, மேற்கு இந்தியா தீவுகள், பங்களாதேஷ், கென்யா ஆகிய நாடுகள் தெரிவாகியுள்ளமை யாவரும் அறிந்ததே. இவற்றுடன் இன்னும் 3 நாடுகள் ஒவ்வொரு World Cup இலும் சேர்ந்து கொள்ளப்படும். இந்த 3 நாடுகள் தெரிவுக்கு ICC சுற்றுப் போட்டிகள் என பெயரிடப்படும். இவ் வருடம் 14 நாடுகள் கலந்து கொண்ட ICC சுற்றுப் போட்டிகளில் முதல் இடம் Holland க்கும் இரண்டாம் இடம் நபீபியாவிற்கும் கிடைத்தது. மூன்றாம் இடத்திற்கு கனடாவும், ஸ்கொட்லாந்தும் தெரிவு செய்யப்பட்டன. இந்த மூன்றாம் இடப் போட்டியில் கனடாவும் Scotland உம் மோதின. Scotland ஏற் கனவே பலம் பொருந்திய அணியை உடையது. அத்துடன் இங்கிலாந்து County Cricket விளையாடும் 5 வீரர்களை உள்ளடக்கியது. இப் பலம் பொருந்திய அணியை வெற்றி கொள்வது கடினம் என்று எல்லோரும் நினைத்திருந்த போது, கனேடிய அணி தமிழ் வீரன் மூலம் அனைவரது நினைப்பையும் பொய்யாக்கியது.



இதில் மிகவும் வேதனைக்குரிய ஒரு விடயம் என்னவெனில், 21 வருடங்களுக்கு பின்பு கனடா World Cup இக்கு தெரிவாகியுள்ளது. அதுவும் Man Of The Match விருதும் தமிழ் வீரன் சஞ்சயன் துரைசிங்கத்திற்கு வழங்கப்பட்டது. ஆனால் தமிழர்கள் எங்கெல்லாம் பிரச்சனைப்படுகிறார்களோ அங்கு நடந்தவற்றையெல்லாம் ஒன்றும் விடாமல் தங்கள் பத்திரிகையில் போடும் ரொரொன்ரோவில் உள்ள ஆங்கிலப் பதிரிகைகள் இந்த பெருமைக்குரிய நிகழ்வை படம் போட்டார்கள். ஆனால் ஒரு வரி கூட ஆங்கிலப் பத்திரிகைகள் எழுதவில்லை இவர் ஒரு இலங்கைத் தமிழர் என்று. ஆனால் எங்கெல்லாம் தமிழ் இளைஞர்கள் பிரச்சனைப்படுகிறார்களோ உடனே கொட்டை எழுத்தில் இலங்கைத் தமிழர் என வர்ணிக்கும் ஆங்கில பத்திரிகைகள், சஞ்சயன் துரைசிங்கம் Man Of The Match என்று எழுதினதேயொழிய இவர் ஒரு இலங்கைத் தமிழர் என்று எங்குமே எழுதவில்லை.

இனி ஆட்டத்தைப் பற்றிய விபரத்தைப் பார்ப்போம். முதலில் துடுப்பெடுத்தாடிய Scotland அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களை எடுத்தது. இதில் முதல் முக்கிய மூன்று விக்கெட்டுகளையும் சஞ்சயன துரைசிங்கமே கைப்பற்றினார். Lockhart, william, Smith ஆகிய மூவருமே Scotland இன் நம்பிக்கை நட்சத்திரங்களாவார்கள். சஞ்சயன் முதல் போட்ட 63 ஓவர்களில் 15 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து இந்த முக்கிய மூன்று விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். முதல் இனிங்ஸ் இல் சஞ்சயன் 8 ஓவர்கள் பந்து வீசி 2 மேடின ஓவர்கள் வீசி, 25 ஓட்டங்கள் மட்டுமே கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இதன் மூலம் Man Of The Match வீரர் என்ற விருதையும் பெற்றார். அடுத்து துடுப்பெடுத்தாடிய கனேடிய அணி 39.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் இவ்வாட்டத்தில் Scotland அணியை 5 விக்கெட்டுகளால் வெற்றி கொண்டது. கனேடிய அணிக்கு Toronto இல் மிகவும் புகழ்பெற்ற தமிழ் விளையாட்டுக் கழகமான செஞ்சூரியன் மூலம் மூன்று வீரர்கள் தெரிவானார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இம் மூன்று வீரர்களில் சஞ்சயனே இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

2003 ஆண்டு நடைபெற இருக்கும் World Cup இல் புகழ் வீரன் துரைசிங்கம் ஸ்ரீலங்கா அணியை எதிர்த்து பந்து வீசக் கூடிய ஒரு வாய்ப்பும் ஏற்படலாம், ஆனாலும் இன்று ஸ்ரீலங்கா அணிக்குப் புகழ் சேர்க்கும் தமிழ் வீரர்கள் ஆன முத்தையா முரளிதரனும், நசல் ஆனோல்ட்டையும் ஒரு பக்கமும் சஞ்சயன் துரைசிங்கத்தை எதிர் அணியிலும் பார்க்கும் ஒரு அரிய சந்தர்ப்பத்தை கனேடிய கிரிகெட் இரசிகர்கள் எதிர் பார்த்திருப்பார்கள் என்பது உண்மை!!!

### COCA COLA CUP - 2001

இப்போது Cocacola cup கொழும்பில் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. இதில் ஸ்ரீலங்கா, இந்தியா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் கலந்து கொள்கின்றன. இதுவரை இம் மும்முனைப் போட்டிகளில் ஸ்ரீலங்கா முன்னணியில் உள்ளது. ஆட்ட விபரங்களை இங்கு பார்ப்போம்.

1St ஆட்டம் ஸ்ரீலங்கா Vs நியூசிலாந்து July 18 - 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 220 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஜெயசூரியா 80, குணவர்த்தனா 22 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து ஆடிய நியூசிலாந்து அணி 49 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 204 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதில் முரளிதரன் 10 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும், Fernando 130 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களை கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார். ஸ்ரீலங்கா அணி 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதில் ஆட்ட நாயகனாக ஜெசூரியா தெரிவு செய்யப்பட்டார்.

2nd ஆட்டம் நியூசிலாந்து Vs இந்தியா July 20 - 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 50 ஓவர், 8 விக்கெட், 211 ஓட்டங்கள் Astle 117, Fleming 25 ஓட்டங்கள் அடுத்து ஆடிய இந்திய அணி 41.1 ஓவர்களில், சகல விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களை மட்டுமே எடுத்தனர். லஸ்மன் 60 ஓட்டங்கள். நியூசிலாந்து அணி 84 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

3rd ஆட்டம் ஸ்ரீலங்கா Vs இந்தியா July 22 - 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 221 ஓட்டங்கள். இதில் குணவர்த்தனா 63, கலுவுத்திரன 36, பெரேரா 28 ஓட்டங்கள். அடுத்து ஆடிய இந்திய அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 215 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. கங்குலி 69, ராவிட் 49 ஓட்டங்களும் எடுத்தனர். முரளிதரன் 2, பெரேரா 2, விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இலங்கை அணி 6 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக சுரேஸ் பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

4Th ஆட்டம் ஸ்ரீலங்கா Vs நியூசிலாந்து July 25 - 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 236 ஓட்டங்கள். Astle 54, Mcmillan 38, Parore 37 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து களம் இறங்கிய ஸ்ரீலங்கா அணி 48.5 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 240 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. நசல் ஆனோல்ட் 91. பெரேரா 56, அத்தபத்து 66 ஓட்டங்களை எடுத்தனர். இதில் ஆட்ட நாயகனாக தமிழ் வீரன் ஆன நசல் ஆனோல்ட் தெரிவு செய்யப்பட்டார்.

5Th ஆட்டம் இந்தியா Vs நியூசிலாந்து July 26 - 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து 46.4 ஓவர், All out, 200 ஓட்டங்கள். Nash 42, Oram 40, Sinclair 36 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து களம் இறங்கிய இந்திய அணி 39.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. யுவராச்சிங் 28, ராவிட் 27, Shewag 33 ஓட்டங்களை எடுத்தனர். நியூசிலாந்து அணி 67 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. NASH ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

6th ஆட்டம் இந்தியா vs ஸ்ரீலங்கா July 28, 2001


முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்கா அணி 46.5 ஓவர்களில், All out, 183 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஜெயசூரியா 57, கலுவுத்திரானா 47, அத்தபத்து 34 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து களம் இறங்கிய இந்திய அணி 45.5 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 184 ஓட்டங்களை எடுத்தது. இந்தியா அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி ஈட்டியது. இதில் லக்மன் 87, ராவிட் 43 ஓட்டங்களை எடுத்தனர்.

7th ஆட்டம் நியூசிலாந்து vs ஸ்ரீலங்கா July 31, 2001

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீலங்காஅணி 36 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 221 ஓட்டங்களை எடுத்தது. இதில் ஜெயவர்த்தனா 51, குணவர்த்தனா 38, அத்தபத்து 34 ஓட்டங்கள் எடுத்தனர். அடுத்து களம் இறங்கிய நியூசிலாந்து அணி 36 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. ஸ்ரீலங்கா அணி 106 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஸ்ரீலங்கா அணி ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெற இருக்கும் இறுதியாட்டத்திற்கு தெரிவாகியுள்ளது.

GLOBAL
EDUCATIONAL TRUST PLAN
R.E.S.P. - அரசாங்க அங்கீகாரம் பெற்ற சேமிப்புத் திட்டம்
நீங்கள் முதலிடும் தொகைக்கு அரசின் 20% மானியத்தைப் பெற்றுக்கொள்ளலாம். உலகின் எப்பாகத்திலும் கல்வி கற்பதற்கு உங்கள் சேமிப்பைப் பயன்படுத்தலாம்.
மேலதிக விபரங்களுக்கு: V. Sathiyaraj
Tel: 416 291-5853 Cell: 416 826 - 5853

GB TRANSPORT



உங்கள் வீட்டு, வணிக, அலுவலகம் சம்பந்தமான சகல பொருட்களை பாதுகாப்பாகவும், துரிதமாகவும் இடமாற்றம் செய்வதற்கு அழையுங்கள்.
HOME - 416 335 1910
CELL - 416 459 9268

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

**1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்**

## கலையுலகப் பிரம்மாவிற்கு எனது அஞ்சலி

*- வீணை மைந்தன்*



(திரைப்பட நாடக உலகின் முதல் மரியாதைக்குரிய முதல்வராக விளங்கிய கலைநாயகன், கலைக்குரிசில் நடிகர் திலகம் அவர்களது கலைப் பயணம்..."**நான் வாழப் போகிறேன்**" எனும் தலைப்பின் கீழ் சுமார் இரண்டு ஆண்டுகளாக "**உலக தமிழோசை**" இல் பல்லாயிரம் வாசகர்களால் படிக்கப்பட்டும் பக்கங்கள் பாதுகாக்கப்பட்டும் வந்துள்ளதை அறிந்து பெருமை கொள்கிறோம்.

சிவாஜி அவர்கள் உயிர் வாழும் போதே இத் தொடர் நூல் வடிவில் வரவேண்டும் என்பதில் திரு. வீணைமைந்தன் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார். அவருடைய விருப்பம் நிறைவேற முன்பே நூல் நாயகன் அமரராகிவிட்டார். நூல் ஆசிரியர் தனது இறுதி அஞ்சலியை '**உலக தமிழோசை**' இன் ஊடாக காணிக்கையாக்குகிறார். - நிர்வாகம்-

### அன்னை இல்லத்திலிருந்து அப்பலோ வரை....

அன்னை இல்லம் கலையுலகத்தில் (படவுலகில்) காலடி வைத்த பின்பு அன்னையின் ஆணைப்படி மணம் முடித்து. மன மகிழ்வுடன் மனையாளின் கைத்தலம் பற்ற இல்லறம் சுகித்த வசந்த மாளிகை.

சென்னை தியாகராஜ நகரில் போக் வீதி தெற்கு - இலக்கம் 16 இல் அவர் வாழத் தொடங்கிய காலத்தலிருந்து அவருடைய திரையுலகப் பொற்காலம் விரிவடைந்தது. இன்று தி. நகர் - போக் வீதி அவருக்கு வழங்கப் பெற்ற பிரான்சு நாட்டுக் கௌரவப் பட்டத்தைச் சுமந்து "டாக்டர் செவாலியர் சாலை" என நினைவுச் சின்னமாகிவிட்டது. அன்னை இல்லத்தின் முன்பு வீட்டு மதிலுடன் கோயில் கொண்டுள்ள விநாயகப் பெருமான் அவரது குல தெய்வம். காவல் தெய்வம்.

தினமும் அதிகாலையில் குளித்து முழுகி கணேசன் எனும் நாமத்தைச் சூட்டப் பெற்ற அந்த மகா கலைஞன் முதன்மைத் தெய்வமான கணேசப் பெருமானைத் தொழுது வணங்கிய பின்பே அன்றைய காரியங்களில் ஈடுபடுவார். அன்னை இல்லத்தின் சோபாக்களும், படிக்கட்டுகளும், அறைச் சுவர்களும் பேச முடியுமானால் எத்தனை எத்தனையோ சரித்திர நிகழ்வுகளை உரைத்து நிற்கும். இந்திய நாட்டின் அனைத்து மாநிலத் தலைவர்கள், கலைஞர்கள், அரசியல் பிரமுகர்கள் உட்பட வெளிநாட்டிலிருந்து வரு[illegible] தந்த முக்கிய பிரமுகர்கள் வரை அன்னை இல்லம் வந்து எமது கலை-நாயகனைக் கட்டித் தழுவிய காட்சிகள் ஏராளம்.... ஏராளம்.

சாதாரண தமிழ்க் குடிமகனாகப் பிறந்து இன்று வானளாவிய வரலாறு படைத்துவிட்டு... 'உமக்கு முன்பும் - பின்பும்' யாருமே இக்கலையுலகில் இல்லையே என்று இக்கணமே அறுதியிட்டுக் கூறவைத்து விட்டு வரலாறு ஆகிவிட்ட கலைப் பிரம்மாவிற்கு எனது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகிறேன். உம்மை விமர்சிப்பது - இரசிப்பது - படிப்பது - பார்ப்பது... ஸ்பரிசித்து மகிழ்வது... உம்மைப் பாடுவது.... எழுதுவது.... உம்முடன் அருகில் இருந்து நீரே பரிமாற விருந்துண்பது.... அழைத்து வாருமய்யா அவரைப் படுக்கையறைக்கு.... என்று உமது படுக்கையறைக்கே வருவது.... சம்பாசிப்பது என்பது சாதாரண விடயமா என்ன?

அவ்வளவு பாக்கியமும் கிடைக்கப் பெற்றவன் நான் என்பதையெண்ணி யெண்ணி இறும்பூதெய்துகிறேன், இறுமாப்புக் கொள்கிறேன். என்ன தவம் செய்தேனோ உம்மை இரசிப்பதற்கு! நீரும் தமிழன்; நானும் தமிழன். தமிழன் பெருமையடைவது வேறு தமிழனே தமிழர்கள் அனைவரையும் பெருமை கொள்ள வைப்பது என்பது வேறு.

நீர் இரண்டாவது வகை. இக் காரியம் இலேசில் எவருக்கும் கைவரக் கூடியதல்ல. நீர் வாழும் போது நானும் வாழ்ந்தேனே... அடடா எவ்வளவு பெருமையாக உணர்ச்சி வசப்படுகிறேன்... உரத்துக் கூறும் போது,

நீர் ஒரு கம்பன்... நீர் எழுதியதோ நடிப்பு எனும் இராமாயணம். அதில் மூழ்க மூழ்க மூச்சுத் திணறுகிறது. ஆனாலும் விரும்பிய முத்துக்களை அள்ளி வரக் கூடியதாக உள்ளது.

நீர் ஒரு பாரதம்..... உம்மைப் படிக்கப் படிக்கப் பக்கங்கள் விரிந்து கொண்டே போகிறது....

நீர் ஒரு அகராதி.... புரட்டப் புரட்ட அரிதாரம் பூசிய வேடங்களை எண்ண முடியவில்லை...

உம்[illegible]ப் புரட்டிவிட்டு நடிப்பு எனும் பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து பரீட்சை எழுதுவதென்பது அப்படியொன்றும் இலேசுப்பட்ட காரியமல்ல.... நடிப்பு ஒரு தவம்.... அந்தத் தவத்தின் வலிமை பெற்ற ஒரே "ராஜரிஷி" நீர் தான்.

பிரம்மன் இப்போதும் உம்மைத் தான் காதலிக்கிறான்.... அவனால் கூட இன்னொரு 'சிவாஜி கணேசனை' படைக்க முடியாது. இது தான் இன்றைய நிஜம். இயக்குநர் பாரதி ராஜா கூறியது போல் எமக்கு எழுதக் கற்றுக் கொடுத்தவர்கள் பலர் இருக்கலாம். ஆனால் பேசக் கற்றுக் கொடுத்த ஆசான் நீர் ஒருவரே!

உமது பேச்சு உரைவீச்சு உம்மைச் சுவாசித்தவர்களின் உயிர் மூச்சாகிவிட்டது. தமிழ் மொழியின் உயிர் மூச்சே! பிரிந்தது வெறும் பருவுடல் தான். உமது மூச்சுப் பிரிந்து விட்டதாக யாரும் கூற முடியாது. ஏனெனில் இந்தத் தமிழ் மண்ணும் - மக்களும் உமது தமிழ் மூச்சை உள் வாங்கி விட்டார்கள். அப்பலோ மருத்துவ மனைக்குச் சித்திர குப்தனால் காலங் கணிக்கப் பெற்று அனுப்பி வைக்கப்பெற்ற கால தூதுவன் வெறுங்கையுடன் அல்லவா மீண்டும் யமலோகம் வந்தான். என்ன ஏமாற்றம் யமதர்மராஜனுக்கு! காலதேவனே நேரில் வந்தாலும் பாசக் கயிறை உம்மீது வீசியிருக்க முடியாது. அவனுக்கும் உம்மிடத்து அளவு கடந்த பாசம். அதனால்தான் உமது வெற்றுடம்பை மட்டும் அவர்களால் தூக்கிச் செல்ல முடிந்தது.

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு '**வேலவன் பிலிம்ஸ்**' ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

***சினிமா போட்டி # 10***

**1. 1985ஆம் ஆண்டு கமலஹாசன் நடித்து வெளிவந்த படங்களில் இரட்டைவேடம் ஏற்று நடித்த படம் எது?**
**2. 'ஸ்ரார்' படத்தின் இசையமைப்பாளர் யார்?**
**3. ரஜினிகாந்தின் 100வது படத்தின் பெயர் என்ன?**

***சினிமாப் போட்டி #9இன் விடைகள்***

1. எஸ். ஏ. ராஜ்குமார்
2. கற்பூரதீபம், சிவகுமார், அம்பிகா, சுஜாதா
3. சிகாமணி, ரமாமணி

**போட்டி #9இல் வெற்றி பெற்றவர்கள்**

1) கோமதி, மிசிசாகா

விடைகளை August 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.



**நட்சத்திரங்களின் முதல் படம்**

- சுஷ்மிதா சென்--ரட்சகன்
- ஐஸ்வர்யா ராய்--இருவர்
- சூர்யா--நேருக்குநேர்
- விஜி--கோழிகூவுது
- ஆனந்த் பாபு--உயிருள்ளவரை உஷா
- சௌந்தர்யா--பொன்னுமணி
- பிரபு தேவா--வால்டர் வெற்றிவேல்

தமிழே! தமிழ் மூச்சே !

தென்றலின் தழுவலாய்! புயலின் வேகமாய்! பூவின் வாசமாய்! நிலவின் குளிர்ச்சியாய் - பனித்துளியின் மென்மையாய் - சங்கீத சுரங்களாய் ஒலித்தது உமது குரல். தமிழுக்கு ஒலி வடிவம் தந்த கலை வடிவம் நீர்! கலைவடிவங்கள் தாங்கி காவிய நாயகர்களாய் வலம் வந்தவர் நீர்! எழுத்தில் உள்ள வரலாறுகளுக்கு உயிர் தந்து உலா வந்த கலா புருஷர் நீர்!

1950 இக்குப்பின் தமிழர்களின் சாயங்காலச் சந்தோசத்திற்குக் காரணமாகவிருந்தவர் நீர் தான் என்பார் கவிப் பேரரசு வைரமுத்து. நீர் தமிழர்களின் சந்தோஷம் மட்டுமல்ல... அந்தி மாலைக்குப் பின் உம்மைச் சந்திக்க வந்த சகோதரிகளுக்குப் பாசமுள்ள அண்ணண், நேசமுள்ள நண்பன், தாய்மார்களின் தலைமகன், தந்தையர்க்குக் கடமை வீரன், சில சமயங்களில் நீர் தான் கண்கண்ட அவதார புருஷர்.... உம்மை நான் எல்லா வடிவங்களிலும் மானசீகமாக ஸ்பரிசிப்பவன்.... உமக்கொரு உண்மை தெரியுமா...! நீர் தாங்கிய அரிதாரம் பூசி வலம் வந்த அத்தனை தமிழ் திரை வடிவங்களிலும்.... என் நெஞ்சத் திரையில் உலா வந்து கொண்டிருக்கிறீர்.

நீர் என் அகத்தில் உலா வரும் வரை என்னுயிர் தொடரும்... நீர் உயிருடன் வாழும் போதே உமது முன்னிலையில் உம்மைப்பற்றி நான் எழுதிய பக்கங்களை அரங்கேற்றி விடத் துடித்தேன். அது கை கூடவில்லை. எனக்கு நீர் வேறு பணியை விட்டுச் சென்றுவிட்டீர்...



உம்மை நான் மறப்பேன.... உமது பெயரால் என் பணி தொடரும்... 'அப்பல்லோ' என்பது வானுயரப் பறந்து செல்லும் நவீன விண்கலம். அப்பெயர் கொண்ட இடத்திலிருந்து உமது இறுதிப் பயணத்தை... வானுலகம் நோக்கி ஆரம்பித்துவிட்டீர்... அன்னை இல்லத்திலிருந்து அப்பலோ வரை வந்து.... ஆகாச வெளியில் இரண்டறக் கலந்த கலையுலகத் திலகமே உமக்கு எனது இறுதி வணக்கத்தைத் தெரிவிக்கிறேன் ஐயா.

இந்தத் தமிழ் மண்ணும் - மக்களும் உள்ள வரை நீர் என்றும் எங்களுடனேயே...
நாம் உமது சுவாசத்தினூடாகவே...

வணக்கம்.

# VENTURE PLUS CAPITAL

## YOUR FINANCING SOURCE

## ANYTHING IS POSSIBLE

### WE SPECIALIZE IN

- Business Loans
- Personal Loans
- 1st and 2nd Mortgage
- Consolidations
- Equipments Leasing
- Car Financing
- Franchises
- Buy outs
- Private Venture Capitals
- Credit Cards
- Personal Line of Credit

### பின்வரும் சேவைகள் எம்மிடம் கிடைக்கும்

- வியாபாரக் கடன்
- தனிப்பட்ட கடன்
- 1ம் - 2ம் தர வீட்டுக்கான கடன்
- ஒன்றிணைத்தல் கடன்
- சாமான்களுக்கான (Equipment) கடன்
- வாகனக் கடன்
- கிளைகளுக்கான கடன்
- தனிப்பட்ட வென்ஷர் கடன்
- கடன் அட்டைகள்
- வென்ஷர் கடன் உத்தரவாத உறுதி

Existing or Start up Business up to $10 Million
$10k to 100k approved in 72 Hrs

**No Financial Statement**
**No Collateral**

**VENTURE PLUS CAPITAL**

**PERSONAL LOANS**
$5K TO $10K
GOOD OR BAD CREDIT
NO UP FRONT FEES
NO DELAYS

*WE GET YOU MORE THAN YOU COULD POSSIBLY GET ON YOUR OWN*

தமிழில் தொடர்புகளுக்கு: (கீத்) KEITH (416) 274-9980

**AGENT WANTED NO QUALIFICATION NEEDED. FAX RESUME (416) 946-1175**


## திருக்குறள்



**240. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய**
**வாழ்வாரே வாழா தவர்.**

பழி உண்டாகாமல் வாழ்வதே வாழ்க்கை எனப்படும். புகழ் இல்லாதவர் வாழ்வதும் வாழாததும் ஒன்றுதான்.

**241. அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்**
**பூரியார் கண்ணு முள.**

கொடிய உள்ளம் கொண்ட இழிமக்களிடம் சுடக் கோடிக்கணக்கில் செல்வம் குவிந்திருக்கலாம்; ஆனாலும் அந்தச் செல்வம் அருட் செல்வத்திக்கு ஈடாகாது.

**242. நால்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால்**
**தேரினும் அ.்.தே துணை.**

பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருள் உடைமையே வாழ்க்கைக்குத் துணையாய் விளங்கும் நல்வழி எனக் கொள்ளல் வேண்டும்.

**243. அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த**
**இன்னா உலகம் புகல்.**

அருள் நிறைந்த மனம் படைத்தவர் அறியாமை எனும் இருள் சூழ்ந்த துன்ப உலகில் உழலமாட்டார்.

## இலங்கை பட்டதாரிகள் சங்கம் தரும் அறிவித்தல்

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜுலை 29, 2001 அன்று இலங்கை பட்டதாரிகள் சங்கம் தனது வருடாந்த வாகனங்கள் கழுவுதல் மூலம் நிதிசேகரிக்கும் நிகழ்வு மிகச்சிறந்த முறையில் நடத்தியது. வழமைபோல் இம்முறையும் சேர்த்த பணத்தை Centenary Hospital இற்கு வழங்குவதாக தீர்மானித்துள்ளது.

இந்த சேவைத் திட்டம் மிகச்சிறப்பாக நல்ல முறையில் நிறைவேறியதற்கு உதவிய சகலரிற்கும் நன்றி நவில்கின்றது. முக்கியமாக எங்களிற்கு அன்று முழுவதும் எங்களுடன் சேர்ந்து சகலவகைகளிலும் உதவி செய்த ஸ்காபரோ றேஞ்சர்ஸ் உதைபந்தாட்ட கழக வீரர்களிற்கும் உறுப்பினர்களிற்கும் எங்களுடைய சேவையை தமிழ்மக்களிற்கு தெரியப்படுத்திய கொண்டிருந்த CTR, CTBC. கீதவாணி வானொலி நிறுவனங்களிற்கும் இங்குள்ள தமிழ் பத்திரிகைகளிற்கும் எமது சங்க உறுப்பினர்களிற்கும் நன்றி தெரிவிக்கின்றோம்.

மேலும் இலங்கையில் வட, கிழக்குப் பகுதிகளில் அமைந்துள்ள பல்கலைக்கழகளிங்களிற்காக புத்தககங்கள் சேகரிப்பது யாவரும் அறிந்ததே. பல்கலைக்கழகங்களிற்கான நூல்களைத் தரவிரும்புபவர்கள் கீழுள்ள இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம்.

416 293-4697    416 438-2949
416 315 9397    416 299-3652


## நான் ஒரு வழக்கறிஞர் இல்லை

உங்களுக்கு தெரியுமா?

**கிறிமினல் குற்றவாளியென தீர்மானிக்கப்பட்டால் உங்கள்**

- நிரந்தர வதிவிடஉரிமை
- குடியுரிமை
- குடும்ப ஒன்றிணைவு
பாதிக்கப்படும்

• ACCIDENT INJURIES
• CRIMINAL
• DOG BITES
• SLIP & FALL

வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?
முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

பின் இவரை அழையுங்கள்



416 490-9199

S.K.THEESAN
எஸ்.கே.தீசன்

www.kalakalappu.net

கலகலப்பு தீசன் 416-490-9199


# விண்வெளி 66

## அந்நியர்கள்

தருபவர்:- கனி

அந்நியர்களை - ஏலியன்களை இனம் காண எடுத்துக் கொண்ட எமது முயற்சியில் நம்மவர்களின் தடங்கள் இடையே குறுக்கிடுகிறது. இந்த ஏலியன்கள் பகுதியிலேயே அது பற்றியும் பார்ப்போம்.

சூரியனைச் சுற்றிப் பத்துக் கோள்கள் வலம் வருகின்றன. அதில் ஒன்று தான் நமது பூமி எனவும் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளின் முன்னரே சுமேரியர்கள் அறிந்துள்ளார்கள். பூமி தட்டையானது எனவும், அதுவே பிரபஞ்சத்தின் மையம் எனவும். பூமியின் கட்டுப்பாட்டிலேயே கடவுளின் அதிகாரத்தின் படி சூரியன், சந்திரன் மற்றும் நட்சத்திரங்கள், கோள்கள்



எல்லாம் இயங்குகின்றன என்ற வலுவான நம்பிக்கையான மனிதர்களிடையே சுமேரியர்கள் முற்றிலும் முரணான கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பது அவர்களது சூரியத் தொகுதிப் படத்தின் மூலம் அறியக் கூடியதாக உள்ளது. இக் கருத்தே ஒரு வேளை அவர்களின் அழிவுக்குக் காரணமாகவும் கூட இருந்திருக்கலாம். யார் இந்த சுமேரியர்கள் என ஆய்வு செய்தால் பெரும் வியப்புக்குள்ளாக வேண்டித்தான் வரும்.

குமரியும் சுமரியும் ஒன்றே என்பர் நம்மவர் சிலர். இது மிக மிகச் சரியானது தான் என்பது எனது எண்ணம் கூட. எப்படி எனப் பார்ப்போம். முதன் முதலில் சிந்துவெளி நாகரீகம் இனம் கண்டு கொள்ளப்பட்ட போது அந்த நாகரிகத்துக்குரிய மக்கள் யார் எனத் தேடல் நடைபெற்றது. கரப்பா, மொகஞ்சதாரோ போன்ற பகுதியில் கண்டெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகள், மண்டை ஓடுகள் என்பன சுமேரியர்களினது போன்றே காணப்பட்டது. உடல்வாகு கூட ஒன்றாகவே இருந்திருக்கக் கூடும் என்ற ஐயம் எழுந்தது. சுமேரியரும், சிந்துவெளி மக்களும் ஒரே மக்கள் என்ற கருத்துத் தான் ஆய்வாளர்கள் இடையே ஆரம்பத்தில் இருந்தது. ஆனால் இரண்டுமே அழிந்துவிட்ட இனங்கள். மேலும் தொடர்ந்த ஆய்வுகள் சிந்துவெளிமக்கள் தென்னிந்தியாவில் வாழும் திராவிடர்களது முன்னவர்கள் தான் என்பது ஐயம் தெளிவுற பல ஆய்வாளர்களாலும் நிரூபணங்களுடன் கூறப்பட சிந்துவெளி மக்களின் சொந்தக்காரர் யார் என்ற பிரச்சனை முடிவடைந்துவிட்டது. ஆனால் சுமேரியரை மறந்துவிட்டனர். சுமேரியர்கள் ஆக்கிரமிப்பாளர்களால் அழிக்கப்பட்டு அப் பகுதியை ஆக்கிரமிப்பாளர்கள் அபகரித்துக் கொள்ள சுமேரியர்களின் கதை முடிந்து விட்டது. யாரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த சுமேரியாவில் இருந்து வந்தவர்தான் ஆபிரகாம். யூதர்களும் அரேபியர்களும் தமது தந்தை என்று கூறிக் கொள்ளும் இந்த ஆபிரகாமின் இயற் பெயர் அபிராம் என விவிலியம் கூறுகிறது. சுமேரியாவில் உள்ள "ஊர்" எனும் பட்டணத்தில் இருந்து தான் ஆபிரகாமை ஆண்டவர் அழைத்தார் என்கிறது பைபிள். ஆபிரகாமின் தந்தை கடவுள் விக்கிரகங்கள் செய்பவர் என இஸ்லாமியர்கள் ச[illegible]கினன்றனர். "ஊர்" என்ற பெயர் இறுதியில் வரும் இடங்களைக் கொண்ட பகுதிகளில் நம்மவர்கள் வாழுகின்றார்கள் இன்றும். உதாரணமாக நல்லூர், புத்தூர் போன்ற இடங்கள் எமக்கு நன்கு பரீச்சயமான பேர்கள். சுமேரியர்கள் இருந்த பகுதியில் வாழ்ந்த மக்களின் பெயர்கள் கூட நம்மவர்களது பெயரை ஒத்து இருக்கின்றன. உதாரணமாக விவிலியத்தில் உள்ள சில பெயர்களைப் பார்த்தால் சாமுவேல், பென்னவேல், ஏசானயா.

இதைவிட ஆரம்ப ஆய்வுகளின் படி சுமேரியரும் சிந்து வெளி மக்களும் ஒரே மக்கள் எனக் கூறப்பட்டது. ஏறக்குறைய ஒரே காலப்பகுதியினர் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டு வாழ்ந்தவர்கள். சிந்து வெளிமக்கள் தமிழ் மொழி பேசிய தமிழர்கள் எனக் கூறப்பட்டால் சுமேரியர்கள் யாராக இருக்க முடியும்? அவர்களும் கூடத் தமிழர்களாகவே இருந்திருக்க வேண்டும். குமரிக் கண்டம் கடலினுள் அமிழப் போவதை அறிந்த குமரிக்கண்ட மக்கள் அதாவது தமிழர்கள் உலகின் பல பகுதிகளுக்கும் புலம் பெயர்ந்து சென்றிருக்கலாம் அப்படிச் சென்றவர்கள் வளமான நதிப் பகுதிகளில் தங்கி வாழத் தொடங்கியிருக்கலாம். அப்படி வந்த மக்களே சுமேரியர், சிந்துவெளி மக்கள் என, மேலும் கூறின் பண்டைய எகிப்தியர்களும் ஆக வேண்டும் இந்த பண்டைய எகிப்தியர்கள் "பண்டே" என்ற தென்னிந்தியப் பகுதியில் இருந்து வந்தவர்கள் நாங்கள் என்று கூறுகின்றார்கள். அதாவது பாண்டியர்களின் வழித் தோன்றல்களாக அவர்கள் இருந்திருக்க வேண்டும்.

இது தமிழர்களாகிய எமது பூர்வீகம் பற்றிய ஆய்வு அல்ல. விண்வெளிப் பார்வை மட்டுமே. ஒரு காலத்தில் தமிழர்கள் கணிதம், விஞ்ஞானம், விண்வெளியில் அறிவு நிரம்பியவர்கள் என்ற ஐயம் எல்லோரிடமும் உண்டு. சுமேரியர்களின் வானியல் கொள்கையை இன்று வாழும் விண்வெளி ஆய்வாளர்களை மூக்கில் கைவைக்க வைத்துள்ளது. சு[illegible]ரியர்கள் கூடத் தமிழர்கள் தான் என்பது எண்ணம். இராவணனை இ[illegible]சதன் எனக் கூறுகின்றார்கள். இராட்சதர்கள் ஏலியன்கள் ஆக இருக்க வேண்டும் என்ற ஐயம் சில விஞ்ஞான ஆய்வாளர்களிடையே உண்டு ஆயின் இராவணன் வழித் தோன்றல்கள் எனக் கூறும் நாம் தமிழர்கள் யாராக இருக்கக் கூடும். ஒருவேளை நாமும்கூட.... வேண்டாம் விட்டுவிடுவோம்.

### அறிந்து கொள்ளுங்கள்

- சந்திரன் பூமியையும் தன்னையும் சுற்றி வர 22 நாட்களாகும்.
- கிரகங்களில் மிகச் சிறியது புதன் (மெர்க்குரி). சூரியனுக்கு மிக அருகில் உள்ளது. இது தன்னைத் தானே ஒரு முறை சுற்றி வர 59 நாட்கள் 15 மணியாகும்.


Neelam SILK

உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE


'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'


"நீலம் சில்க்"

☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

* * *

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)





ELECTRICAL REPAIRS

உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் றேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

BREAD MASTER BAKERY

பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



ரோஸ் பாண் கிடைக்கும்

பாண், பனிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083

## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### "உன்னதமான ஒரு உறவின் பிரிவு"

அன்று ஜீலை மாதம் 21ஆம் திகதி சனிக்கிழமை வழமை போல வார இறுதி விடுமுறையை மகிழ்ச்சியாக கழிக்க முடியாத வகையில் மனம் பாரமாக இருந்தது. கணவனின் பிரிவுத்துயரைத் தாங்க முடியாத அப்பாவிப் பெண் ஒருத்தியின் விபரீத முடிவால் பலியாகிவிட்ட பச்சிளம் குழந்தைகளின் இறுதிச் சடங்கு அன்று காலை நடைபெற்றுக் கொண்டு இருந்ததால், மனம் அந்த நிகழ்வுகளைச் சுற்றியே வட்டமிட்டுக் கொண்டு இருந்த காரணமே மனத்தின் பாரமாகும். உறவா? முறையா? நண்பர்களா? வேண்டியவர்களா? தெரிந்தவர்களா? எதுவுமே இல்லையே. பின்பு ஏன் தேவையற்றவற்றை எண்ணி அல்லல் உற வேண்டும்? பாழாய்ப்போன மனித நேயம் என்ற ஒன்றை மனதில் வளர்த்து விட்டவர்கள் மேல் தான் பழி போட வேண்டும்.

மதியம் தொலைபேசி மணி அழைத்தது. வழமை போல எனது நலத்தில் அக்கறை கொண்ட அன்பு நண்பனாகத் தான் இருக்க வேண்டும். வார நாட்களில் தொடர்பு கொள்ள முடியாவிட்டாலும் வார இறுதி நாளில் முதல் நாளே அழைத்து விடுவான். அவனுடன் மனம் விட்டு பேசி அன்றைய மனப் பாரத்தை குறைக்கலாம் என்று எண்ணிய எனக்கு, அவன் தந்த செய்தி இடியாக காதில் இறங்கியது. சிவாஜி இறந்து விட்டார். ஒரு கணம் அதிர்ந்து விட்ட எனக்கு நவராத்திரி திரைப்படத்தில் அவர் பேசிய வசனம் "நான் காண்பதென்ன கனவா அல்லது நினைவா" மனத்திரையில் பளிச்சிட்டுச் சென்றது. என் நண்பன் சொல்வது உண்மையாக இருக்குமா? பொய்யாக இருக்கக் கூடாதா என்று மனம் பதை பதைத்தது. ஆனால் அவன் எனது அன்பு நண்பன் அல்லவா, எமது நட்பு எனும் உறவுக்கு பாலம் அமைத்தவர் அல்லவா இந்த சிவாஜி. அவர் பற்றி பொய்யான செய்தியை அன்பு நண்பன் தருவானா?

யார் இந்த சிவாஜி? மனம் ஏன் இப்படி அவரது பிரிவை எண்ணித் துடிக்கின்றது? உறவா? முறையா? நண்பரா? வேண்டியவாரா? ஆம் ஐம்பதுகளில் பிறந்து, அறுபதுகளில் வளர்ந்த என்னைப் போன்ற, என் நண்பனைப் போன்றவர்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் சொற்களால் விவரிக்க முடியாத, என்ன வென்று விளக்க முடியாத ஒரு ஆத்மாத்தமான உறவினன். அவரது உறவு உன்னதமானது. எங்கள் மனங்களில் மனித நேயத்தை வளர்க்க பாடுபட்டவர்களில் ஒருவர். அந்த உறவு எவ்வாறு உண்டானது?

எனது மனம் 35, 40 வருடங்கள் பின் நோக்கி பாய்கின்றது. சில மாலைப் பொழுதுகளை சந்தோசமாக கழிப்பதற்கு திரைப்படங்கள் பார்க்க உறவினர்களுடன் செல்வதுண்டு இனிமையான பாடல்கள் முதலாக, இயற்கை காட்சிகளையும் இரசித்த எனக்கு புரிந்தும் புரியாமலும் ஆரம்பத்தில் இருந்த திரைக் கதையை புரிந்து கொள்ளும் தன்மை, வயது ஏற அறிவும் வளர்ந்து புரிய ஆரம்பித்தது. சாதாரணமாக எல்லோரைப் போல என்னையும் திரைப்படங்கள் நோக்கி இழுத்துச் சென்றது. திரைப்பட நடிகர்களுக்கு மனித இனம் என்றுமே கடமைப்பட்டது. காரணம் வாழ்க்கையில் சில மணி நேரமாவது மனிதரை சந்தோசமாக இருக்க வைப்பது. அவர்களது தொழில் உண்மையான அன்பும், பாசமும், நேசமுமே மனித மனங்களை சந்தோசப்படுத்தும் தன்மை கொண்டவை.

ஆனால் தானும் தனது உறவுகளும் மட்டுமே சந்தோசமாக இருக்க வேண்டும் என்ற வகையில் எண்ணும் மனித இனத்தில் எந்த தொடர்பும், அறிமுகமும் இன்றி மனித இனத்தை சந்தோசப்படுத்தும் நடிகர்களுடன், எம்மை அறியாமல் ஒரு வித பாச உறவை மனங்களில் நாம் வளர்த்துக் கொள்கின்றோம். திரைப்படங்களில் பல நடிகர்கள் நடித்த போதும் சிவாஜி அவர்கள் நடித்தார் என்பதை விட வெள்ளித் திரைகளில் வாழ்ந்து காட்டினார் என்றே சொல்ல வேண்டும். தனது ஆற்றலால் பல இலட்சம் மனித மனங்களில் இடம் பிடித்துக் கொண்டதைப் போல எங்கள் மனங்களிலும் நீங்காத ஒரு இடத்தை பிடித்துக் கொண்டார்.

சிவாஜியின் மேல் ஏற்பட்ட ஈர்ப்பு எனது அண்ணன், எனது நண்பன் மற்றும் எனது மனங்களில் ஒரு வெறியாகவே வளர ஆரம்பித்தது. எம்மேல் அன்பு கொண்ட உறவினர்களைத் தேடி அவர்களது வீடுகளுக்கு எவ்வளவு ஆசையுடன் ஓடிச் செல்வோமோ அது போல எங்கு சிவாஜி அவர்கள் நடித்த திரைப் படம் திரையிடும் போதும் அந்த திரை அரங்கு எங்கு இருந்தாலும் தேடிச் சென்று கண்டு களிப்பதுண்டு. அப்போது நாம் மாணவப் பருவத்தில் 10,11 வது வகுப்புகள் படித்துக் கொண்டு வாழ்க்கையின் அடுத்த அத்தியாயத்தை ஆரம்பிக்க இருந்த கால கட்டம் சினிமா பார்த்தால் பிள்ளைகள் பழுதாகி விடுவார்கள் என்று சினிமா பார்க்கும் பழக்கத்தை தவிர்ப்பதில் மிக அவதானமாக பெற்றோர்கள் இருந்த காலம் அது. ஆனால் சிவாஜி அவர்கள் மேல் இருந்த அன்பினாலும், அவரது திரைப்படங்கள் நல்வழிப்படுத்தும் என்ற நம்பிக்கையாலும் எமது தாயார், சிவாஜி அவர்களின் புதிய படங்கள் திரையிடும் நாட்களில் முதல் நாள், முதல் திரையீட்டைப் பார்ப்பதற்காக விடியற்காலை 5 மணிக்கு எம்மை யாழ். நகர் போக அனுமதி அழிக்கும் அளவிற்கு நம்பிக்கையை பெற்று இருந்தார் சிவாஜி அவர்கள். அப்படி சிவாஜி அவர்கள் என்ன தான் வெள்ளித் திரைகளில் செய்தார்? எம்மைக் கவர்வதற்கு இந்த சிவாஜி.

